# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 320/மா/2025**

**நாள்: 21.01.2026**

V. குமார்
குரோம்பேட்டை --- முறையீட்டு மனுதாரர்
சென்னை

ஆணையர்
தாம்பரம் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–44, குரோம்பேட்டை, ராதா நகர், மார்க்கெட் ரோடு, கதவு எண் 11 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. குமார் என்பவரின் 14.08.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.08.2025 அன்று பெறப்பட்டு 320/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை–44, குரோம்பேட்டை, ராதா நகர், மார்க்கெட் ரோடு, கதவு எண் 11 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V. குமார் என்பவர் தனது 14.08.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

> "I wish to inform you that I am a Civil Engineering contractor, and that I have been carrying out various works under orders from Tambaram Corporation.
>
> The order against which payment is pending even though I have carried out and completed the work, are listed below.
>
> 1. Work order No.: 7503/2018/E1 dated 26.02.2021 for underground drainage fund work at Pallavaram Municipality value of Rs.14 Lakhs.
> 2. Work order No.: 7503/2018/E1 dated 26.02.2021 for underground drainage fund work at Pallavaram Municipality value of Rs.12.5 Lakhs.
>
> The above works were completed well within the stipulated period (i.e.) some time in 2021 and I raised my bills accordingly.
>
> I would like to inform further that I have been favoured with payment to the tune of 75% after a year, but due to reasons not known, the balance payment 25% remains pending as of date, which is over 4 years.

In spite of my sustained follow up and reminders, I regret that I have still not been favoured with the payment.

May I therefore request you to kindly look into this matter and use your good offices to help me obtain the payment, as early as possible.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 19.09.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் தனது 29.10.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் 3915/2025/இ1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

"தாம்பரம் மாநகராட்சி 25.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு. V. குமார் ஒப்பந்ததாரருக்கு, 2 பணிகளுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பணிகளுடன் மொத்தம் 16 பணிகளுக்கு 09.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கி 25.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் குறிப்பாணை ந.க. எண் 24374/2021/சி2, நாள் 25.11.2021–ல் பல்லாவரம் நகராட்சி முன்னாள் ஆணையர் திரு. C. மதிவாணன் அவர்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு முறையானபடி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது. எனவே ஒப்பந்ததாரருக்கு பில் பட்டியல் வழங்கப்படவில்லை.

தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு நாள் 23.08.2022–ன்படி குழுக்கள் அமைக்கப்பட்டு பணி மேற்பார்வை அலுவலர்கள் கோப்பு மற்றும் அளவுப் புத்தகத்தில் உள்ளவாறு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்ற உண்மைத் தன்மையினை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பேரில் திரு. V. குமார் ஒப்பந்ததாரருக்கு 2 பணிகளுக்கும் 75% தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கோப்புகள் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் கோரப்பட்டு, பொதுப்பிரிவின் மூலம் விசாரணைக்காக ஒப்படைப்பு செய்யப்பட்டது. இந்நிலையில் விசாரணை அலுவலர் பணி மாறுதலில் சென்ற காரணத்தினால் மற்றொரு விசாரணை அலுவலர் நியமனம் செய்யும் வரை கோப்பினை பொதுப் பிரிவில் பராமரிக்க நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் திரு. V. குமார் ஒப்பந்ததாரர் மேற்கொண்ட பணிகளுக்கான மீதத் தொகை 25%–னை விடுவிக்குமாறு தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவத்தில் புகார் அளித்துள்ளார் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 15.12.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 15.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"சிவில் இன்ஜினியரிங் ஒப்பந்ததாரரான நான் தாம்பரம் மாநகராட்சியின் உத்தரவுகளின் பேரில் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறேன்.

நான் தாம்பரம் மாநகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி மூலம் பெறப்பட்ட கீழ்க்கண்ட இரண்டு பணிகளை மேற்கொண்டு முடித்ததற்கு பணம் வழங்க வேண்டி நான் சமர்ப்பித்த பட்டியல் விவரங்கள்:–

(1) பல்லாவரம் நகராட்சியில் நிலத்தடி வடிகால் பணிக்கான ஆணை எண்: 7503/2018/E1 நாள் 26.02.2021 அதன் மதிப்பு ரூ.14 லட்சம் ஆகும்.

(2) பல்லாவரம் நகராட்சியில் நிலத்தடி வடிகால் பணிக்கான ஆணை எண்: 7503/2018/E1 தேதியிட்ட 26.02.2021 அதன் மதிப்பு ரூ.12.5 லட்சம்.

மேற்கண்ட பணிகள் 2021 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் என்னால் முடிக்கப்பட்டன. அதன்படி பணம் பெறுவதற்கு எனது பட்டியல்களை சமர்ப்பித்தேன். ஒரு வருடத்திற்குப் பிறகு எனக்கு 75 சதவீதத்திற்கான தொகை அளிக்கப்பட்டுள்ளது, ஆனால் மீதமுள்ள 25% (ரூ.7.50 இலட்சம்) தொகை எந்தவித காரணங்களையும் தெரிவிக்காமல் கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக வழங்கப்படாமல் உள்ளது.

பல நினைவூட்டல்கள் அளித்த போதும், எனக்கு மீதமுள்ள 25% தொகை வழங்கப்படவில்லை.

எனவே, மேற்கண்ட மீதமுள்ள ஒப்பந்தத் தொகையை விரைவில் கிடைக்க உத்தரவு பிறப்பிக்குமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் 15.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"தாம்பரம் மாநகராட்சி 25.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.V.குமார் ஒப்பந்ததாரருக்கு, இரண்டு பணிகளுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பணிகளுடன் மொத்தம் 16 பணிகளுக்கு 09.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கி 25.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

பல்லாவரம் நகராட்சி முன்னாள் ஆணையர் திரு. C. மதிவாணன் அவர்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு முறையானபடி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்பாக குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது. எனவே ஒப்பந்ததாரருக்கு பில் பட்டியல் வழங்கப்படவில்லை.

தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவின்படி குழுக்கள் அமைக்கப்பட்டு பணி மேற்பார்வை அலுவலர்கள் கோப்பு மற்றும் அளவுப் புத்தகத்தில் உள்ளவாறு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்ற உண்மைத் தன்மையினை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பேரில் திரு. V. குமார் ஒப்பந்ததாரருக்கு 2 பணிகளுக்கும் 75% தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கோப்புகள் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் கோரப்பட்டு, பொதுப்பிரிவின் மூலம் விசாரணைக்காக ஒப்படைப்பு செய்யப்பட்டது. இந்நிலையில் விசாரணை அலுவலர் பணி மாறுதலில் சென்ற காரணத்தினால் மற்றொரு விசாரணை அலுவலர் நியமனம் செய்யும் வரை கோப்பினை தாம்பரம் மாநகராட்சி பொதுப் பிரிவில் பராமரிக்க நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் தெரிவிக்கப்பட்டது. எனவே, விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டு அன்னாரின் அறிக்கையின் அடிப்படையில் மனுதாரருக்கு மீதமுள்ள தொகை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மேலும், இது

குறித்து தாம்பரம் மாநகராட்சி ஆணையர் மூலமாக நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு விரிவான கடிதம் அனுப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை, உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சிவில் இன்ஜினியரிங் ஒப்பந்ததாரரான மனுதாரர் தாம்பரம் மாநகராட்சியின் உத்தரவுகளின் பேரில் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வந்தார் என்பதும், 2021–ம் ஆண்டில் தாம்பரம் மாநகராட்சியில் உள்ள முந்தைய பல்லாவரம் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18 மற்றும் 22–ல் இரண்டு நிலத்தடி வடிகால் பணிகளுக்காக முறையே ரூ.14 இலட்சம் மற்றும் ரூ.12.5 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் பெறப்பட்ட பணிகளை முடித்து, பணம் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலுக்கு, 75 சதவீத தொகை அளிக்கப்பட்டது என்பதும், மீதம் 25 சதவீதத்திற்கான (ரூ.7.50 இலட்சம்) தொகையினை இதுநாள் வரை வழங்கப்படவில்லை என்பதும், இத்தொகையை விரைவில் கிடைக்க உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

தாம்பரம் மாநகராட்சி 25.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.V.குமார் ஒப்பந்ததாரருக்கு, இரண்டு பணிகளுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பணிகளுடன் சேர்த்து மொத்தம் 16 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என்பதும், பல்லாவரம் நகராட்சி முன்னாள் ஆணையர் திரு. C. மதிவாணன் அவர்களுக்கு மேற்குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு முறையானபடி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்பாக குறிப்பாணை வழங்கப்பட்டதால், ஒப்பந்ததாரருக்கு பில் பட்டியல் வழங்கப்படவில்லை என்பதும், தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவின்படி குழுக்கள் அமைக்கப்பட்டு பணி மேற்பார்வை அலுவலர்கள் கோப்பு மற்றும் அளவுப் புத்தகத்தில் உள்ளவாறு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்ற உண்மைத் தன்மையினை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பேரில் திரு. V. குமார் ஒப்பந்ததாரருக்கு 2 பணிகளுக்கும் 75% தொகை விடுவிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி கோப்புகள் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் கோரப்பட்டு, பொதுப்பிரிவின் மூலம் விசாரணைக்காக ஒப்படைப்பு செய்யப்பட்டது என்பதும், இந்நிலையில் விசாரணை அலுவலர் பணி மாறுதலில் சென்ற காரணத்தினால் மற்றொரு விசாரணை அலுவலர் நியமனம் செய்யும் வரை கோப்பினை தாம்பரம் மாநகராட்சி பொதுப் பிரிவில் பராமரிக்க நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் தெரிவிக்கப்பட்டது என்பதும், எனவே, விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டு அன்னாரின் அறிக்கையின் அடிப்படையில் மனுதாரருக்கு மீதமுள்ள தொகை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மேலும், இது குறித்து தாம்பரம் மாநகராட்சி ஆணையர் மூலமாக நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு விரிவான கடிதம் அனுப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், 2021–ம் ஆண்டில் தாம்பரம் மாநகராட்சியில் உள்ள முந்தைய பல்லாவரம் பெருநகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 18 மற்றும் 22–ல் இரண்டு நிலத்தடி வடிகால் பணிகளுக்காக முறையே ரூ.14 இலட்சம் மற்றும் ரூ.12.5 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் பெறப்பட்ட பணிகளை முடித்து, பணம் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலுக்கு, 75 சதவீத தொகை மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ள நிலையில், சம்பந்தப்பட்ட கோப்புகள் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் கோரப்பட்டு பொதுப் பிரிவின் மூலம் விசாரணக்காக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதும், விசாரணை

அலுவலர் நியமனம் செய்யப்பட்டு அன்னாரின் அறிக்கையின் அடிப்படையில் மனுதாரருக்கு மீதமுள்ள தொகை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், இது குறித்து தாம்பரம் மாநகராட்சி ஆணையர் மூலமாக நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு விரிவான கடிதம் அனுப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தாம்பரம் மாநகராட்சி உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு நிலுவைத் தொகையினை வழங்கிட ஏதுவாக, நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு உடனடியாக விரிவான கடிதம் அனுப்பி தொடர் நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளுமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. V. குமார்,
கதவு எண் 11, மார்க்கெட் ரோடு,
ராதா நகர், குரோம்பேட்டை,
சென்னை–600 044.

(2) ஆணையர், தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–600 045.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

22/1/26
செயலாளர்
22-1-26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032